**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**முன்னிலை :– திருமதி. P. கனிமொழி, L. L. M.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி.

2056 திருவள்ளுவராண்டு விசுவாவசு வருடம் மாசி மாதம் 27 ஆம் நாள்.

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11 ஆம் நாள் புதன் கிழமை

<u>TNMY09–000586–2024</u>

**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்.227/2025</u>**

| | | |
|---|---|---|
| குற்றமுறையீட்டாளர் | : | அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>பூம்புகார் காவல் நிலையம்,<br>குற்ற எண். 430/2021 |

//எதிர்//

| | | |
|---|---|---|
| எதிரிகள் | : | 1. காளிதாஸ், 36/2026,<br>த/பெ சுப்ரமணியன்,<br>தொட்டாளம்மன்கோவில் தெரு,<br>மீனவர்காலனி, பூம்புகார், சீர்காழி தாலுக்கா.<br><br>2. பொன்னரசன், 36/2026,<br>த/பெ அஞ்சப்பன்<br>தொட்டாளம்மன்கோவில் தெரு,<br>மீனவர்காலனி, பூம்புகார், சீர்காழி தாலுக்கா. |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | குற்றம் சாட்டப்பட்டது | : | 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும்,<br><br>2 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii) ன் கீழும், | |
| 2 | குற்றச்சாட்டு வனையப்பட்டது | : | 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும்,<br><br>2 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii) ன் கீழும், | |
| 3 | சம்பவம் நடந்த நாள் | : | 18.09.2021 | |
| 4 | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள் | : | 19.09.2021 | |
| 5 | எதிரி/எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | : | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | 19.09.2021 | 27.09.2021 |



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.11 18:31:38 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 28.10.2021 | | |
| 7 | பிரிவு 230(1)BNSS ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து வினவப்பட்ட நாள் | : | 07.01.2026 | | |
| 8 | பிரிவு 355 BNSS ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட விபரம் மற்றும் அதன் முடிவுகள் | : | 1) புகார்தாரர் தரப்பில் U/s 359 (ii) of BNSSன் கீழ் 04.3.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.01/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது.<br>2) அரசு தரப்பில் U/s 348 of BNSS ன் கீழ் 06.3.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு, M.P.No.02/2026 ஆக கோப்பில் எடுக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது. | | |
| 9 | வழக்கின் சாட்சிகள் முதல் மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 04.03.2026 | 04.03.2026 |
| | | | அ.சா.2 | 04.03.2026 | 04.03.2026 |
| | | | அ.சா.3 | 06.03.2026 | 06.03.2026 |
| 10 | எதிரி/எதிரிகளிடம் குற்றம் குறித்து பிரிவு 351(1)(ஆ) BNSS ன் கீழ் வினவிய நாள் | : | 09.03.2026 | | |

இவ்வழக்கு 24.11.2025 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு வந்து 09.03.2026–ஆம் தேதி என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. B. செந்தில்வடிவு தரங்கம்பாடி அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. தியாகராஜன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்...



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.11 18:31:46 +0530

**தீர்ப்புரை**

1. கடந்த 18.09.2021ம் தேதி இரவு 08.30 மணியளவில் தருமகுளம் முனியாண்டி விலாஸ் ஹோட்டலில் வாதியும், சாட்சி2ம் சாப்பிட்டுவிட்டு வெளியே வரும்போது எதிரிகள் இருவரும் ஹோட்டல் உள்ளே வரும்போது சாட்சி 2ஐ 1 வது எதிரியானவர் இடித்ததால், சாட்சி2க்கும் 1 வது எதிரிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு எதிரிகள் இருவரும் சாட்சி 2ஐ காமகுரோதமான வார்த்தைகளால் திட்டியும், நீங்க வானகிரி தானடா என்று கேட்டு 1 வது எதிரி கீழே கிடந்த கல்லை எடுத்து வாதியின் இடது பக்க நெற்றியில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியும், வாதியையும், சாட்சி 2ஐயும் கல்லை காட்டி என்னைக்கு இருந்தாலும் உங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தும் குற்றம்புரிந்துள்ளதால் 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii) ன் கீழும் தண்டிக்கப்படவேண்டியவர்கள் என இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மேற்படி குற்ற அறிக்கையை பெற்ற இந்நீதிமன்றம் மேற்படி அறிக்கையை நன்கு பரிசீலித்து மேற்படி எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் படி வழக்கினை கோப்பிற்கு எடுத்துக்கொண்டது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிகளுக்கு அரசு தரப்பினரால் ஆதாரமாகக் கொள்ளப்பட்டதும், பிரிவு 230 BNSS ன் படி உள்ளதுமான வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது.

4. ஆவணங்களை பரிசீலனை செய்ததின் பேரில் எதிரிகள் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதிய ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால் 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii) ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து, விளக்கி வினவ எதிரிகள் குற்றத்தினை மறுத்த காரணத்தினால் அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.11 18:31:53 +0530

5. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** வாய்மொழி சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அவர்கள் தரப்பில் **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**அரசு தரப்பு சாட்சிகளின் சுருக்கம்**:–

6. **அ.சா.1 தமிழரசன்** தனது சாட்சியத்தில், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு தான் தருமகுளம் முனியாண்டி விலாஸ் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்துபோது அங்கு சிலர் கூட்டமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள் என்றும், அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்றபோது அந்த கூட்டத்தில் இருந்த யாரோ தன்னை தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், அந்த கூட்டத்தில் எதிரிகள் இருந்ததாலும் அவர்களுக்கும் தங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர்கள் தான் தன்னை தாக்கியிருக்க கூடும் என நினைத்து அவர்கள் மீது மிகை படுத்தி புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டதாகவும், தற்போது நீதிமன்றத்தில் தன்னிடம் காட்டப்படும் **புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 ஆன கையொப்பம்** தன்னுடையது தான் என்றும் பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. **அ.சா.2 மணிகண்டன்** தனது சாட்சியத்தில், இந்த வழக்கு சம்பந்தமாக எதுவு் தெரியாது என பிறழ் சாட்சியாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. **அ.சா.3 ராதாபாய்** தனது சாட்சியத்தில் தான் தற்போது பூம்புகார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், தன்னோடு பணிபுரிந்த வகையில் சிறப்பு உதவி ஆய்ளவார் சேகர் மற்றும் உதவி ஆய்வாளர் சேதுபதி ஆகியோர்களின் கையொப்பம் தனக்கு நன்கு தெரியும் என்றும், இந்த வழக்கின் சாட்சிகள் சமாதானம் ஆகிவிட்டபடியாலும், அரசு தரப்பு வழக்கிற்கு முரண்பட்டு சாட்சியம் அளித்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 19.09.2021ஆம் தேதி காலை 06.00 மணிக்கு பூம்புகார் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் சேகர் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது மயிலாடுதுறை அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.11 18:32:01 +0530

பார்த்த போது அவர் மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியதாக தெரிவித்ததன் அடிப்படையில் அவரது வீட்டிற்கு சென்று தமிழரசன் என்பவரிடமிருந்து **அ.சா.ஆ.2 ஆன புகார் வாக்குமூலம்** பெற்று நிலையம் வந்து காவல் நிலைய குற்ற எண் 430/2021, இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கின் **அ.சா.ஆ.3 ஆன முதல் தகவல் அறிக்கையை** பதிவுசெய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. மேற்படி வழக்கு கோப்புகளை மேல்விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் சேதுபதி அவர்களின் பார்வைக்கு வைக்கப்பட்டு அவர் வழக்கினை மேல் விசாரணை எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சிற்றரசன் மற்றும் ரமேஷ் ஆகியோர்கள் முன்னிலையில் **அ.சா.ஆ.4 ஆன பார்வை மகசர் மற்றும் அ.சா.ஆ.5 ஆன மாதிரி வரைபடம்** தயார் செய்தார் என்றும், பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவுசெய்தார் என்றும், இவ்வழக்கில் காயம்பட்ட அசா1ற்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஹபீசா சுல்தானா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிந்து அவர் கொடுத்த **அ.சா.ஆ.6 ஆன விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழை** பெற்றார் என்றும், பின்னர் வழக்கின் எதிரிகளின் மீதான விசாரணையை முடித்து இதச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழ் இறுதி அறிக்கையை தாக்கல் செய்தார் என சாட்சியம் அளித்துள்ளார்.

10. இவ்வழக்கில் அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசு தரப்பு வழக்கை அனுசரிக்காமல் பிறழ் சாட்சியாக கருதப்பட்டுவிட்டதால் அரசு தரப்பு பட்டியல் சாட்சிகள் 3 முதல் 9 வரையிலான பட்டியல் சாட்சிகளை விசாரிக்க தேவையில்லை என்று கருதி மேற்குறிப்பு செய்ததன் பேரில் அந்த சாட்சிகளை விசாரிப்பதில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்கள். இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. எதிரிகளிடம் பிரிவு 351(1)(ஆ) BNSS ன் கீழ் எதிரிகளுக்குப் பாதகமாக தோன்றும் சங்கதிகளைப் பொறுத்து கேள்வி கேட்கப்பட்டது. எதிரிகள் சாட்சியத்தை



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.11 18:32:09 +0530

மறுத்துரைத்தும், தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

12. இரு தரப்பு ஆவணங்களையும், சாட்சியங்களையும் பரிசீலனை செய்ததில், இவ்வழக்கிற்கு தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், அரசு தரப்பில் 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii) ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு இடமின்றி அரசு தரப்பால் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

13. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது.

<u>தீர்வு</u>

14. எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.3** சாட்சிகள் வாய்மொழி சாட்சியமாக விசாரிக்கப்பட்டு சான்றாவணங்களாக **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

15. அ.சா.1 தனது புகார் வாக்குமூலத்தில், கடந்த 18.09.2021ம் தேதி இரவு 08.30 மணியளவில் எதிரிகள் இருவரும் அ.சா.2ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவும், 1 வது எதிரி கல்லால் அ.சா.1ன் இடது பக்க நெற்றியில் அடித்து சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாகவும், எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாகவும் கூறிவிட்டு அதற்கு முரண்படும் வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 4 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு தான் தருமகுளம் முனியாண்டி விலாஸ் ஹோட்டலில் சாப்பிட்டுவிட்டு வெளியே வந்துபோது அங்கு சிலர் கூட்டமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள் என்றும், அந்த தகராறை வேடிக்கை பார்க்க சென்றபோது அந்த கூட்டத்தில் இருந்த யாரோ தன்னை தாக்கினார்கள் என்றும், யார் தாக்கினார்கள் என்று தெரியவில்லை என்றும், அந்த கூட்டத்தில் எதிரிகள் இருந்ததாலும் அவர்களுக்கும் தங்களுக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்து வந்ததாலும் அவர்கள் தான் தன்னை தாக்கியிருக்க கூடும் என நினைத்து அவர்கள் மீது மிகை படுத்தி புகார் வாக்குமூலம் கொடுத்துவிட்டதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.1 அரசு தரப்பு



KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.11 18:32:16 +0530

குறுக்கு விசாரணை சாட்சியத்தில் எதிரிகளோடு சமாதானம் ஆகி சமாதான மனுவில் கையொப்பம் செய்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார்.

16. இவ்வழக்கினை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் இந்த வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாத என சாட்சியம் அளித்துள்ளதால் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டுள்ளார். எனவே, மேற்படி சாட்சிகளின் சாட்சியங்கள் நம்பக்கூடியதாக இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

17. அ.சா.1, அ.சா.2 ன் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில் எதிரிகள் அ.சா.2 ஐ தகாத வார்த்தைகளால் திட்டியதாகவோ, 1 வது எதிரி அ.சா.1ஐ கல்லால் தாக்கி சொற்ப காயத்தை ஏற்படுத்தியதாகவோ, எதிரிகள் கொலை மிரட்டல் விடுத்ததாகவோ குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை.

18. எனவே, இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 அரசு தரப்பு வழக்கையும், வழக்கு சம்பவத்தினையும் சார்ந்து சாட்சியம் அளிக்காமல் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ள நிலையில் புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அரசு தரப்பு வழக்கினை எதிரிகளுக்கு எதிராக முடிவு செய்வது நீதியின் நலனுக்கு உகந்ததாக அமையாது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. எனவே, மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, இவ்வழக்கின் சாட்சிகள் யாரும் சம்பவம் பற்றி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில் எதிரிகள் மீதான குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி தெளிவாக நிரூபிக்கப்படவில்லை. எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

20. முடிவாக, 1 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 324, 506(ii) ன் கீழும், 2 வது எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 506(ii) ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றத்தில் எதிரிகள் **"குற்றவாளிகள் இல்லை"** என்று தீர்மானித்து, எதிரிகளை பிரிவு 271(1) BNSS –ன் கீழ் **விடுதலை** செய்து இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.



KANIMOZHI
Digitally signed by KANIMOZHI
Date: 2026.03.11 18:32:23 +0530

21. எதிரிகளால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பிணைப் பத்திரத்தினை ரத்து செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

22. அரசு தரப்பில் இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைகள் நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 11 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.11 18:32:30 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**அட்டவணை :-**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>:-**

அ.சா.1 – தமிழரசன்

அ.சா.2 – மணிகண்டன்,

அ.சா.3 – ராதாபாய், உதவி ஆய்வாளர்

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

அ.சா.ஆ.1 – புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.1ன் கையொப்பம்

அ.சா.ஆ.2 – புகார் வாக்குமூலம்

அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை

அ.சா.ஆ.4 – பார்வை மகசர்

அ.சா.ஆ.5 – மாதிரி வரைபடம்

அ.சா.ஆ.6 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ்

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்</u> :-** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள், சான்று பொருட்கள்</u> :-** இல்லை

KANIMOZHI Digitally signed by KANIMOZHI Date: 2026.03.11 18:32:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
தரங்கம்பாடி.

**குறிப்பு:**

1. வழக்கு விசாரணையின்போது எதிரிகள் ஜாமீனில் இருந்தார்கள்.

2. எந்த ஒரு சாட்சியையும் விசாரணைக்காக மூன்று வாய்தாக்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. வழக்கு முடிவு குறித்து காவல் துறையினருக்குத் தெரிவிக்கப்பட்டது.